முனைவர் ரா.ராஜா,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம் ,சென்னை **-600117.**
அலைப்பேசி எண்; **9080348727**
மின்னஞ்சல் முகவரி; **rokithraja1984@gmail.com**

**Dr. R. Raja,**

**Assistant Professor,**

**Department of Tamil,**

**Vels Institute of Science, Technology & Advanced Studies,**

**Pallavaram, Chennai -600117.**

**Mobile No.; 9080348727**

**Email Address; rokithraja1984@gmail.com**

## தலைப்பு ; **Title**

# இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் சமூகச் சீர்திருத்தப் போக்கு

Social reformist tendencies in Rajam Krishnan's novels

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலந் தொட்டு சமகாலம் காலம் வரையிலான படைப்புகளில் ஆண் பெண் என்ற பாகுபாடின்றி தங்கள் சிந்தனைகளை கருத்துகளை தமிழ்க் கூறும் நல்லுலகிற்கு தந்து காலத்தால்

அழியாப் புகழ்ப் பெற்று வாழ்ந்தவர்கள், வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பலர்.அத்தகைய சிறப்புமிக்க படைப்பாளுமையில் தனக்கென தனித்துவம் கொண்ட சமகால பெண்ணிய படைப்பாளர்களுக்கெல்லாம் நெறியாளர் போன்று வாழ்ந்தவர் இராஜம் கிருஷ்ணன் அவர்கள். அவர்தம் படைப்புகளில் மானிடவியலையும் மனவியலையும் (Anthropology and Psychology) எழுதுவதில் வல்லவர். நாவலுக்கான மையப்பொருளை முன்பே திட்டமிட்டு உரிய இடத்தை அடைந்து, களஆய்வு செய்து, சமகாலப் பிரச்சினைகளை எழுதுவதே இராஜம் கிருஷ்ணனின் தனித்தன்மையாகும். அவரது நாவல்களில் இடம் பெற்றுள்ள சமூக நலச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.


## Abstract

In the history of Tamil literature from the Sangam period to the present day, there are many who have lived and are living, giving their Tamil language to the world without discrimination of men or women, and have gained immortal fame over time. Rajam Krishnan lived like a mentor to all contemporary feminist writers who have their own uniqueness in such special creativity. He is adept at writing anthropology and psychology (anthropology and psychology) in his works. Rajam Krishnan's uniqueness is to plan the main subject of the novel in advance and reach the appropriate place, conduct field research and write about contemporary issues. This article is designed to examine the social welfare ideas that appear in his novels.



திறவுச் சொற்கள் ;,அன்பு ,தியாகம் ,பெண்ணடிமை ,பெண்கல்வி , வறுமை ,மனித நேயம் நாட்டுப் பற்று

Keywords: love, sacrifice, femininity, women's education, poverty, humanity, patriotism


## முன்னுரை

மூத்த பெண் எழுத்தாளரான இராஜம் கிருஷ்ணன்1946லிருந்து பல்வேறு பத்திரிகைகளில் எழுதி வந்த ஆளுமை மிக்க பெண் எழுத்தாளர் ஆவார்.கணவரின் பணிமாற்றம் காரணமாக ஊட்டி, குந்தா, கோவா போன்ற இடங்களுக்குச் சென்றிருந்தமை இவர் நாவல் உருவாக்கத்திற்கு

உறுதுணையாக இருந்தது இராஜம் கிருஷ்ணனின் சிறுகதை, வாழ்க்கை வரலாறு, வானொலி நாடகங்கள்,மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம் போன்ற பல துறைகளில் தன் பங்களிப்பைச் செய்திருந்தாலும் சிறந்த சமூக நாவலாசிரியர் என்ற முறையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறார்.

## இராஜம் கிருஷ்ணன் இளமைக் காலம்

1925-ம் ஆண்டு தமிழகத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள முசிறியில் பிறந்தவர். பள்ளிக்கு சென்று முறையான கல்வி பயிலாதவர். பெண்கள் பூப்படையும் முன்பே திருமணம் செய்து வைத்துவிடும் அன்றைய சமூக வழக்கப்படி, 15வது வயதிலேயே ராஜம் கிருஷ்ணனுக்குத் திருமணம் செய்துவைக்கப்பட்டது. திருமணத்திற்குப் பின்னர் சென்னை கிழக்கு தாம்பரத்தில் குடியேறினார்.மின் பொறியாளரான கணவரின் உதவியால் பல புத்தகங்களைப் படித்து, பின் தானே கதைகளை எழுத ஆரம்பித்தார்

## இராஜம் கிருஷ்ணனின் படைப்புகள்

1948-இல் சுதந்திர ஜோதி என்ற நாவல் மூலம் எழுத்துலகில் புகுந்த இராஜம் கிருஷ்ணன் நாற்பதுக்கும் மேற்பட்ட நாவல்களைப் படைத்துள்ளார். முதல் சிறுகதையான வெள்ளி டம்ளர் சாவி அவர்களின் ‘வெள்ளி மணி’யில் வெளிவந்தது. அலைகடலில், பவித்ரா, அல்லி போன்ற குறு நாவல்கள், டாக்டர் ரங்காச்சாரி வாழ்க்கை வரலாறு, பயணநூலான அன்னை பூமி, மாஸ்கோ போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். கதையின் கதை, கானாற்றின் செல்வங்கள் போன்ற 25 வானொலி நாடகங்களையும் படைத்துள்ளார். ஊசியும் உணர்வும் என்ற உயரியகதை உலக மொழிகளின் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. அதிலிருந்து அவ்வப்போது சில ஆண்டு மலர்களிலும் மற்றும் சிறப்பிதழ்களிலும் சிறுகதைகள் எழுதினார். இருந்தாலும், “நாவல்துறையில் அவர் பெற்றிருக்கும் புகழ்தான் முக்கியமானது” என்று மணிக்கொடி எழுத்தாளரும் சிறந்த திறனாய்வாளருமான ‘சிட்டி’ பெ.கோ. சுந்தரராஜன் குறிப்பிட்டுள்ளார். நாவல்

என்பது காலத்தால் உருவான கலைவடிவம் என்பதை நன்கு உணர்ந்தவர். நாற்பதுக்கும் மேற்பட்ட இவருடைய நாவல்களைச் சமூக நாவல்கள், வட்டார நாவல்கள் என்று இரு வகைகளில் அடக்கலாம்

வட்டார நாவல்கள்

இராஜம் கிருஷ்ணன் எழுதிய குறிஞ்சித்தேன், வளைக்கரம், கரிப்பு மணிகள் போன்ற வட்டார நாவல்களில், அந்தந்த வட்டார மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள் சித்திரிக்கப்பட்டிருப்பதோடு மண்ணின் மணமே நாவலின் பின்னணியாய் நின்று படிப்போரை ஈர்க்கிறது.

குறிஞ்சித்தேன் எனும் நாவல் படகர் வாழ்வின் உண்மையான படப்பிடிப்பு. போலி நாகரிகத்தின் இடையே பண்பாடு காக்கும் படகரின் காவியம். பழைய பண்பாட்டிற்கும் புதிய நாகரிகத்திற்கும் இடையே நடக்கும் போராட்டத்தினை இந்நாவலில் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இந்நாவலைப் படிக்கும் போது நீலகிரி மலையிலேயே பல்லாண்டுக் காலம் வாழ்ந்து வருவது போன்ற உணர்வே நம்முன் மேலோங்கி நிற்கிறது. அதேபோல் இவருடைய வளைக்கரத்தைப் படிக்கும்போது கோவா நாட்டின் மண்ணில் நாம் நிற்பதுபோல் உணரமுடிகிறது. தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது கரிப்பு மணிகள் என்ற புதினமாகும்.

சமூக நாவல்கள்

பால் வேறுபாடு, வர்க்கப் போராட்டம், பாலியல் வன்முறை, சிறுவர் சிறுமியர் மீதான வன்முறை, பெண்களின் அடிமை நிலை போன்ற பல பிரச்சினைகளைப் பற்றி இராஜம் கிருஷ்ணன் தம்முடைய சமுக நாவல்களில் பேசுவதோடு நிற்காமல், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழியும் காட்டியுள்ளார். காலந்தோறும் பெண்கள் வாழ்ந்த அடிமை வாழ்வைப் பற்றி விளக்கிக் கூறுவதோடு அமையாமல், இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் கல்வியறிவோடு, தொழிற்கல்வியையும் பெற்று எவ்வாறு விழிப்புணர்வோடு வாழ வேண்டும் என்றும் பல சமூக

நாவல்களில் அறிவுறுத்தியுள்ளார். சமுதாயம் சிறப்படைய அவர் கூறும் வழிகள் மூலம் இராஜம் கிருஷ்ணனின் நாட்டுப்பற்றை உணர முடிகிறது.

இராஜம் கிருஷ்ணனின் சமூக நாவல்களில் சேற்றில் மனிதர்கள், கரிப்பு மணிகள், அலைவாய்க் கரையில் ஆகியவை சிறப்பு வாய்ந்தவை. உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கைப் பிரச்சினைகளை இந்நாவல்கள் வெளிப்படுத்துகின்றன

குழந்தை தொழிலாளர் மீதான வன்முறை

கூட்டுக் குஞ்சுகள் புதினத்தில் குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிலில் முடக்கித் தீக்குச்சிகளை அந்தப் பெட்டியில் அடைப்பதைப் போன்று குழந்தைகளை அடைப்பதை விஜி எதிர்க்கிறாள். காலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை குழந்தைகளை வேலை வாங்கும் முதலாளித்துவ சமுதாயத்தில், அவர்களுக்குத் தகுந்த ஊதியமும், அடிப்படைச் சலுகைகளும் தரப்படாத நிலையில் உடலும், மனமும் நொறுங்கும் அவலம் குழந்தைகளின் மீதான வன்முறையாக கருத வைக்கிறது."குழந்தைகளுக்கு எதிர்காலமில்லாமல் செய்யக் கூடிய தொழிலும், உற்பத்திப் பெருக்கமும் உண்மையில் மகத்தான தேசிய நஷ்டம் என்று கருதுகிறேன்" என்று விஜி, குழந்தை தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டப்படுவதைத் தட்டிக் கேட்கிறாள். கல்வி கற்று ஓடியாடி விளையாட வேண்டிய இளஞ்சிறார்கள், வறுமையின் கொடுமையால் கூலித்தொழிலாளர்களாவது கண்டிக்கப்படுகிறது.

சமூக அமைப்பில் பெண்களின் நிலை

தமிழ் நாட்டுப் பெண்ணினம் விலங்கு பூட்டப்பட்டிருக்கும் அவல நிலையை இராஜம் கிருஷ்ணன் சுட்டுகிறார். இன்றைய சமூக அமைப்பில் பெண்களுக்கு வீடும் விலங்கு, வெளியுலகமும் விலங்கு என்று கூறுகிறார்.

"பெண் மெல்லியள்; வீடே அவளுக்குரிய பாதுகாப்பான இடம் என்ற காப்பை; கண்ணுக்குத் தெரியாத விலங்கைப் பூட்டி விடுகிறார்கள். அந்த விலங்கை உடைத் தெறியத் துணிவின்றி வெளியே செல்லும் போது அதன் சுமையில் அஞ்சிச் சாகிறாள். அவள், அதை உடைத்துக் கொண்டு வெளியே, வண்ண வண்ணப் படை திரண்டாற்போல் வருபவர்களோ பல

மாயக்கவர்ச்சிக்கு அடிமையாகிறார்கள். புரட்சிகரமாக இருக்க வேண்டிய அம்சங்களில் மாற மறுத்துக் காலத்துக்கும் நடைமுறைக்கும் ஒவ்வாத பழைய கருத்துகளுக்கு மதிப்பு கொடுக்கும் குடும்பம் எதுவாயினும் அது விலங்காகவே அமையும்.” இவ்வாறு விலங்குகள் என்ற நாவலில் பெண்களின் அடிமை நிலையைக் குறிப்பிட்டுள்ளார்.

சமூக மேம்பாடு

“குடும்பத்தை நல்லபடியாகக் கொண்டு வந்தாலே சமுதாயம் சிறப்படையும்” என்று வேருக்கு நீர் நாவலில் குறிப்பிட்டிருப்பதிலிருந்து இவரின் சமுதாயப் பற்று வெளிப்படுகிறது.விடுதலை இந்தியாவில் பல்வேறு கட்சிகள் இயக்கங்கள் விளைத்த அரசியல் குழப்பங்களைக் காட்டி, “அன்பும் தியாகமுமே நாட்டு வாழ்வாம் மரத்தின் வேருக்கு நீர் என்றும், ஜனநாயகம் சிறக்க தனிமனிதன் செம்மை நெறியில் ஒழுகுதல் வேண்டும் என்றும்” வேருக்கு நீர் நாவலில் குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தையும், மாற்றத்தையும் முள்ளும் மலர்ந்தது நாவலிலும் காணலாம்.

இராஜம் கிருஷ்ணனின் பார்வை, சமூகவியல் பார்வை என்றும் அவரைப் பொறுத்தவரை நாவல் என்பது சமுதாய மாற்றத்தை உருவாக்கும் சாதனம் என்பதும், நம்பிக்கை ஒளியை ஊட்டிப் படிப்போரைச் செயலாக்கத்தில் செலுத்துவதே அவர் தம் நோக்கம் என்பதும் வெளிப்படை வாழ்வின் போக்குகளையும், சமூகச் சார்புகளையும் கணித்து நிகழ்காலப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்பதும் ஆக்கப்பூர்வமான முடிவுகளை ஆராய்வதுமே தனது இலக்கிய நோக்கமென்றும் இராஜம் கிருஷ்ணனே குறிப்பிட்டுள்ளார். மனிதாபிமானத்தை எழுத்தில் வடித்து நடப்பியலை நாவலாகத் தரும் சமுதாய நாவலாசிரியர் இராஜம் கிருஷ்ணன்

முடிவுரை

புதிய கருக்களுக்கு உருகொடுப்பதும், பழைய பொருளுக்குப் புதிய பின்புலம் தந்துதெளிவுபடுத்துவதும் அவரது சிறப்புத் தன்மைகள்; பழங்குடியினர், பல மாநிலமக்களின் வாழ்வு, நாட்டு வரலாறு, அரசியல் ஆகிய பின்னணியில் நாவல் படைப்பதில்வல்லவர். இலக்கியம் படைப்பவர் சாமானிய மக்களை விட்டு விலகி நிற்கும்போது அங்குக் கலை மலர்வதற்கில்லை" என்று குறிப்பிடும் இராஜம் கிருஷ்ணன், நாவல் என்பது காலத்தால் உருவான கலைவடிவம் என்பதை நன்கு உணர்ந்தவர். இவரது நூல்கள் தமிழக அரசால் 2009 ஆம் ஆண்டில் அரசுடைமை ஆக்கப்பட்டன. இதற்காக மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. முதன்முறையாக எழுத்தாளர் உயிருடன் இருந்தபோதே அரசுடைமை ஆக்கப்பட்டவை இவரது நூல்களே.

ஆய்வுக்கு துணை நின்ற இராஜம் கிருஷ்ணன் நூல்கள் ;

**1.**கரிப்பு மணிகள் ஸ்ரீ செண்பகா பதிப்பகம் **(Shree Shenbaga Pathippagam):** தற்போதைய பதிப்புகள் (2019/2020). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் **(NCBH):** பிரபல பதிப்பு.

**2.**கூட்டுக் குஞ்சுகள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் **(NCBH - New Century Book House)**

**3.**வேருக்கு நீர் பதிப்பகங்கள்: ஸ்ரீ செண்பகா, கௌரா/சாரதா, பரிசல், நாம் தமிழர், தமிழ்ப்புத்தகாலயம்

**4.**குறிஞ்சித் தேன் பதிப்பகங்கள்: ஸ்ரீ செண்பகா பதிப்பகம், நாம் தமிழர் பதிப்பகம்.

**5.**சேற்றில் மனிதர்கள் பதிப்பகம்: தாகம் (முதல் வெளியீடு - 1982) மற்றும்

ஸ்ரீ செண்பகா பதிப்பகம்

## Rajam Krishnan's books that supported the research;

**1. Karippu Manigal** Shree Shenbaga Pathippagam: Current editions (2019/2020). New Century Book House (NCBH): Popular edition.

**2. Koottu Kunjgal** New Century Book House (NCBH - New Century Book House)

**3. Weerukku Neer** Publishing Houses: Shree Shenbaga, Kaura/Sharatha, Parisal, Naam Tamilar, Tamil Putthakalayam

**4. Kurinjith Then** Publishing Houses: Shree Shenbaga, Naam Tamilar Publishing House.

**5. Chetril manithargal** Publishing House: Thagam (First publication - 1982) and

Shri Shenbaga Publishing House